தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ரவி குமார் தியோடர், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (விரிவாக்கம்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 28-3-2012

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஏப்ரல் 2012 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள்

தமிழ்நாட்டில் பரவலாக நடத்தப்பட்ட பூச்சி, நோய் ஆய்வின்படி கீழ்க்கண்ட முன்னறிவிப்பினை இப்பல்கலைக்கழகத்தின் பயிர்ப் பாதுகாப்பு மையம் செய்கின்றது:

குறிப்பாக வரும் ஏப்ரல் மாதத்தில் அனைத்து மாவட்டங்களிலும் வறண்ட வானிலையே காணப்படும். எனவே, வெள்ளை ஈ, மாவுப்பூச்சி, தத்துப்பூச்சிகள் மற்றும் இலைப்பேன் ஆகிய சாறு உறிஞ்சும் பூச்சிகள் பரவலாக பல்வேறு பயிர்களில் அதிகமாக தென்பட வாய்ப்புள்ளது. ஆகையால், விவசாயிகள் தங்கள் வயல்களில் மஞ்சள் ஒட்டும் பொறிகளை (5 / ஏக்கர்) மற்றும் விளக்குப் பொறிகளை வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்டறியவும். தேவைப்பபடின், வேப்பங்கொட்டை சாறு 5 சதவீத கரைசலை தயாரித்து பயிர்கள் மீது தெளிக்கலாம்.

### நெல்

திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் நெற்பயிரில் இலைச்சுருட்டுப் புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்குதல் பரவலாக காணப்படுகின்றன. இவற்றை கட்டுப்படுத்த விளக்கு பொறிகளை வைத்து அந்துப் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கவும். பூச்சிகளின் பாதிப்பு அதிகமாக இருக்கும் நிலையில், வேப்பங்கொட்டை சாறு 5 சதவீதம் கரைசலை தயாரித்து பயிர்கள் மீது தெளிக்கலாம்.

பாக்டீரியா இலை கருகல் நோய் தேனி மாவட்டத்தில் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த காப்பர் ஹைட்ராக்சைடு அல்லது கோசைடு 2.5 கிராம் எடுத்து ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

### உளுந்து

திருவாரூர் மாவட்டத்தில் உளுந்து பயிரில் மஞ்சள் தேமல் நோய் காணப்படுகின்றது. இந்நோயை கட்டுப்படுத்த விவசாயிகள் டைமித்தோவேட் 20 இசி - 2 மி / லிட்டர் தண்ணீர் அல்லது மித்தைல் டெம்மட்டான் 25 இசி - 2 மில்லி ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**பருத்தி**

தேனி மற்றும் திருநெல்வேலி மாவட்டகளில் பருத்தியில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டம் தென்படுகிறது. இவற்றின் நடமாட்டத்தை மஞ்சள் நிற ஒட்டும் பொறியை வைத்து கண்காணிக்கவும். தேவைப்படின், வேப்பங்கொட்டை சாறு 5 சதவீதம் கரைசலை தயாரித்து பயிர்கள் மீது தெளிக்கலாம்.

**கரும்பு**

தேனி மாவட்டத்தில் கரும்பில் தண்டு துளைப்பான் தாக்குதல் பரவலாக காணப்படுகின்றது. இதை கட்டுப்படுத்த டிரைக்கோகிராம்மா முட்டை ஒட்டுண்ணிகளை 4வது மாதம் முதல் 15 நாட்கள் இடைவெளியில், ஏக்கருக்கு 1 சி.சி என்ற அளவில், 6 தடவை வெளியிட வேண்டும்.

**நிலக்கடலை**

நிலக்கடலை பயிரில் இலைச் சுருட்டுப் புழுவின் தாக்குதல் இராமநாதபுரம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் காணப்படுகிறது. விளக்கு பொறிகளை வைத்து அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கலாம். கோடை மழை பெய்யாததினால் இலை சுருட்டுப்புழு தாக்குதல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. தேவைப்படின், வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீதம் தயாரித்து தெளிக்க வேண்டும்.

**பப்பாளி மாவு பூச்சி**

மரவள்ளி, பப்பாளி மற்றும் மல்பெரி பயிர்களில் உள்ள பப்பாளி மாவுப் பூச்சி தாக்குதலை ஒட்டுண்ணிகள் மூலம் கட்டுப்படுத்தலாம். இதற்காக அருகமையிலுள்ள இப்பல்கலைக்கழகத்தின் கல்லூரி, ஆராய்ச்சி நிலையம் அல்லது வேளாண் ஆராய்ச்சி நிலையத்தை அணுகி ஒட்டுண்ணிகளை இலவசமாக பெற்று மாவுப் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

மேலும், விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள:

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வேளாண் பூச்சியியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611214

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயிர் நோயியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611226

மக்கள் தொடர்பு அலுவலர்